# QB365 Question Bank Software Study Material
## பொருளியல் - இடப்பெயர்தல் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்
## 9ம் வகுப்பு
## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 59

**2 மதிப்பெண் வினாக்கள்**

11 x 2 = 22

1) இடப்பெயர்தலுக்கான காரணங்களைப் பட்டியலிடுக

**பதில் :** 1. வேலை
2. கல்வி
3. தொழில்
4. திருமணம்
5. வணிகம்

2) இந்தியாவில் பெண்கள் இடப்பெயர்தலுக்கான முக்கியக் காரணங்கள் யாவை?

**பதில் :** 1. இந்தியாவிலும் தமிழகத்திலும் திருமணமும் திருமணம் சார்ந்த இடப்பெயர்வும் பெண்களின் அதிக அளவிலான இடப்பெயர்வுக்கு முக்கிய காரணமாக விளங்குகிறது.
2. இந்தியாவில் 70% பெண்கள். தமிழ்நாட்டில் 51% பெண்கள் திருமணத்திற்காகவே இடம் பெயர்ந்துள்ளனர்.

3) மிகச் குறைவான எண்ணிக்கையில் வெளி இடப்பெயர்வைக் கொண்ட தமிழ்நாட்டிலிலுள்ள நான்கு மாவட்டங்களின் பெயர்களைக் கூறுக.

**பதில் :** 1. கடலூர்
2. வேலூர்
3. திண்டுக்கல்
4. திருவண்ணாமலை
5. கரூர்
6. நீலகிரி
7. தருமபுரி
8. சேலம்
9. நாமக்கல்
10. கிருஷ்ணகிரி

4) ஏழை மக்கள் மற்றும் வசதி வாய்ப்புடைய மக்கள் இடப்பெயர்வதற்கான காரணங்கள் யாவை?

**பதில் :** 1. ஏழை மக்கள் கிராமப்புறங்களில் நிலவி வரும் தங்களது துயர நிலையிலிருந்து தங்கள் வாழ்வாதாரத்தை மீட்டுக்கொள்ளும் உத்தியாக இடப் பெயர்வை மேற்கொள்கின்றனர்.
2. சற்று வசதி வாயப்பு உடைய மக்கள் தங்களது வாழ்நிலையை மேம்படுத்துவதற்காக இடம் பெயர்தலை மேற்கொள்கின்றனர்.

5) தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் செல்லும் நான்கு நாடுகள் மற்றும் சதவீதத்தினைப் பட்டியலிடுக.

**பதில் :** 1. சிங்கப்பூர் - 20%
2. சவுதி அரேபியா - 16%
3. ஐக்கிய அரபு எமிரேட் - 18%
4. ஐக்கிய அமெரிக்க நாடுகள் - 13%

6) இடப்பெயர்ந்தோர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழில்களைப் பற்றி ஆய்வுகள் வெளிப்படுத்துவது யாது?

**பதில் :** 1. 2015 ஆம் ஆண்டு தமிழகத்தில் இடம் பெயர்தலின் அளவு. தன்மை மற்றும் தொழில்முறைகள் பற்றி தன்னார்வலர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.
2. இவ்வாய்வு இடம் பெயர்ந்தவர்கள் மேற்கொள்ளும் வேலையின் தன்மை குறித்து வெளிப்படுத்துகிறது.
3. இடம் பெயர்ந்தவர்கள் மிகவும் திறமை வாய்ந்த வேலைகளிலும், சாதாரணமாகச் செய்யக்கூடிய வேலைகளிலும் நடுத்தரமான வேலைகளிலும் ஈடுபடுகின்றனர் என்று வெளிப்படுத்துகிறது.

7) மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படக் காரணம் என்ன?

**பதில் :** பிறப்பு, இறப்பு மற்றும் இடம்பெயர்வைப் பொறுத்து மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுகிறது.

8) இடம் பெயர்வோர் - விளக்குக.

**பதில் :** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வேலையைத் தேடியோ அல்லது வளமான வாழ்க்கை நிலையைத் தேடியோ செல்பவர்கள் இடம் பெயர்வோர் எனப்படுவர்.

9) இடம்பெயர்தலின் அளவு மற்றும் தன்மை எதை சார்ந்துள்ளனா

**பதில் :** (i) இடம்பெயர்தல் துவங்கும் இடத்தில் மக்கள் அனுபவிக்கும் அழுத்தம் மற்றும் விருப்பங்கள்.
(ii) இடம்பெயர்தல் துவங்கும் இடத்தில் மக்களின் நகர்வு மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள்.
(iii) சேருமிடத்தில் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் மற்றும் அவை குறித்த தகவல்கள்
(iv) குடியேற்றச் செலவு

10) வாழ்நாள் இடப்பெயர்வு என்றால் என்ன?

**பதில் :** கணக்கெடுப்பின் போது இருக்கும் இடமும் பிறந்த இடமும் வேறுபட்டு இருந்தால் வாழ்நாள் இடப்பெயர்வு என்று அழைக்கப்படுகிறது.

11) இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இடப்பெயர்வு எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

**பதில் :** இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இடப்பெயர்வு இரண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.
(i) பிறப்பிடம் அடிப்படையில்
(ii) வாழிடம் அடிப்படையில்

**<u>3 மதிப்பெண் வினாக்கள்</u>** 4 x 3 = 12

12) மக்கள் தொகை மாற்றத்தின் மூன்று கூறுகள் யாவை?

**பதில் :** 1. பிறப்பு
2. இறப்பு
3. இடம் பெயர்தல்

13) இடம்பெயர்தலைக் கணக்கீடுவதில் ஏற்படும் சிக்கல்கள் யாவை?

**பதில் :** 1. இடம் பெயர்தலைக் கணக்கிடுவதிலும் வரையறைப் படுத்துவதிலும் அதிகளவிலான சிக்கல்களை உருவாக்குகிறது.
2. பெரும்பாலும் அனைவரும் அதிகமான நேரங்களில் ஓர் இடம் விட்டு இன்னாரு இடம் நகர்ந்து கொண்டே இருப்பதால் இடம் பெயர்தலுக்கான நகர்வு எது என்பதை வரையறுப்பது சுலபமான காரியமாக இருப்பதில்லை.

14) இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இடப்பெயர்வு எவ்வடிப்படையில் கணக்கிடப்படுகிறது?

**பதில் :** 1. பிறப்பிடம் அடிப்படையில் கணக்கெடுப்பின் போது இருக்கும் இடமும் பிறந்த இடமும் வேறுபட்டிருந்தால் வாழ்நாள் இடப்பெயர்வு என்று கணக்கிடப்படுகிறது.
2. வாழிடம் அடிப்படையில் கணக்கெடுப்பின் போது இருக்கும் இடமும் கடைசியாக வாழ்ந்த இடமும் வேறுபட்டிருந்தால் வாழிட அடிப்படையிலான இடப்பெயர்வு என்று கணக்கிடப்படுகிறது.

15) இடம் பெயர்தலின் அளவைக் குறைப்பதற்கான வழிகள் யாவை?

**பதில் :** 1. அதிக அளவிலான இடம் பெயர்தலுக்கு காரணம் கிராமப்புறத்தில் காணப்படும் வறுமை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையாகும்.
2. கிராமப்புறங்களின் மீது அரசின் கவனம் இருத்தல் வேண்டும்.
3. ஏழ்மை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையைக் குறைக்கும் விதமான கிராம வளர்ச்சித் திட்டங்கள் அதிக அளவில் வேண்டும்.

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 5 x 5 = 25

16) இடப்பெயர்வு கொள்கையின் நோக்கங்கள் யாவை?

**பதில் :** இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் இடம் பெயர்தல் சார்ந்து பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**இடம் பெயர்தலின் அளவை குறைத்தல்:**

1. அதிக அளவிலான இடம் பெயர்தல் கிராமப்புறத்தில் காணப்படும் வறுமை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையினைப் பிரதிபலிக்கிறது.
2. எனவே கிராமப்புறங்களின் மீது அரசின் கவனம் இருத்தல் வேண்டும்.
3. ஏழ்மை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையைக் குறைக்கும் விதமான கிராம வளர்ச்சித் திட்டங்கள் அதிக அளவிலான இடம் பெயர்தலைக் குறைப்பதற்கு உதவியாக அமையும்.

**இடம் பெயர்ந்து நகர்தலைத் திசை திருப்புதல்:**

1. பெரு நகரங்கள் நோக்கி குவியும் இடம் பெயர்தலைத் திசைமாற்றி அமைத்திடும் கொள்கைகள் நல்ல முடிவுகளாகும்.
2. நிலப்பரப்பு சார்ந்த குடிபெயர்தலால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு நகர்ப்புறங்களை பரவலாக்கும் வடிவமைப்புகள் பொருத்தமான உத்திகளாக அமைகின்றன.

17) இடப்பெயர்வின் முறைகளைப் பற்றி கலந்துரையாடுக;

**பதில் :** மணி : மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுவது ஏன்?
ரவி : பிறப்பு, இறப்பு மற்றும் இடம் பெயர்தலின் காரணமாக மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுகிறது.
மணி : இடப்பெயர்வு என்றால் என்ன?
ரவி : ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மனிதர்கள். விலங்குகள் மற்றும் பறவைகள் இடம் பெயரும் நிகழ்வு இடப்பெயர்வு ஆகும்.
மணி : மனிதர்கள் ஏன் இடம் பெயர்கின்றனர்?
ரவி : மனிதர்கள் வேலை. கல்வி, திருமண வாழ்வு மற்றும் பல காரணங்களுக்காக பெயர்கின்றனர்.
மணி : இடப்பெயர்வு எதன் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது?
ரவி : பிறப்பிடம் அடிப்படையிலும் வாழிடம் அடிப்படையிலும் கணக்கிடப்படுகிறது.
மணி : தமிழ்நாட்டின் இடப்பெயர்வு பற்றி சற்று விளக்கமாக கூறுங்களேன்?
ரவி : 2011 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.2 கோடியாகும்
அவர்களில் 3.13 கோடி மக்கள் இடம் பெயர்ந்தவர்களாவர்.
தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களைவிட மக்களின் நகர்வு கிராமப்புறங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.
பெண்களில் 53% என்றும் ஆண்களில் 23% என்றும் கணக்கிடப்பட்டுள்ளன.
மணி : பெண்களின் இடப்பெயர்வு அதிகமாக இருக்கக் காரணம் என்ன?
ரவி : திருமணமும் திருமணம் சார்ந்ததும் பெண்களின் இடப்பெயர்வுக்கு முக்கியக் காரணமாகும்.
மணி : தமிழ்நாட்டில் எங்கு அதிக இடப்பெயர்வு நிகழ்கின்றது?
ரவி : சென்னை மாவட்டம்.
மணி : வெளிநாடுகளில் வாழ்வோர் பற்றி கூறுங்களேன்?
ரவி : தமிழ்நாட்டின் மொத்த இடப் பெயர்வாளர்களில் 65% பேர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர்.
அவர்களில் 20% சிங்கப்பூரிலும் 18% ஐக்கிய அரபு எமிரேட்டிலும், 16% சவுதி அரேபியா மற்றும் 13% பேர் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் குடிபெயர்ந்துள்ளனர்.
மேலும் மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா. குவைத், கத்தார். ஓமன் ஆகிய நாடுகளுக்கும் இடம் பெயர்ந்துள்ளனர்.
மணி : உலகில் எந்த இரு நாடுகளுக்கிடையே இடப்பெயர்வு அதிகம் நிகழ்கிறது?
ரவி : மெக்ஸிகோ அமெரிக்க ஐக்கிய நாடுகள்.
மணி : தமிழ்நாட்டின் இடப்பெயர்தல் அளவை எவ்வாறு குறைக்கலாம்?
ரவி : ஏழ்மையை அகற்றுதல்.
வளர்ச்சித் திட்டங்கள்.
மற்றும் பாதுகாப்பு அளித்தல் மூலம் இடம் பெயர்தலைக் குறைக்கலாம்.

18) தமிழ்நாட்டின் இடப்பெயர்வில் காணப்படும் ஆர்வமுள்ள தகவல்கள் சிலவற்றைத் தெளிவுபடுத்துக.

**பதில் :** 1. பிறப்பு இறப்பு மற்றும் இடம் பெயர்தலின் காரணமாக மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுகிறது.
2. பெரும்பாலும் அனைவரும் அதிகமான நேரங்களில் ஓர் இடம் விட்டு இன்னொரு இடம் நகர்ந்து கொண்டே இருப்பதால் இடம் பெயர்தலைக் கணக்கிடுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.
3. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7.2 கோடியாகும்.
4. அவர்களில் 3.13 கோடி மக்கள் இடம் பெயர்ந்தவர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
5. பொதுவாக இடப்பெயர்வு நகரப் பகுதிகளோடு மட்டுமே தொடர்புபடுத்தப்படுகிறது.
6. ஆனால் தமிழ்நாட்டில் மக்களின் நகர்வு நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.
7. மேலும் தமிழ்நாட்டில் ஆண்களைவிட பெண்களில் மட்டுமே இடப்பெயர்வு மிக அதிக அளவு காணப்படுகிறது.
8. திருமணமும் திருமணம் சார்ந்த இடப்பெயர்வுகளுமே பெண்களின் அதிக அளவிலான இடப்பெயர்வுக்கு முக்கிய காரணமாக விளங்குகிறது.
9. வியாபாரம், வணிகம், வேலை. கல்வி போன்ற காரணங்களுக்காகத் தமிழர்கள் பல நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.
10. ஏழைகள் வாழ்வாதாரத்திற்காகவும். வசதி வாய்ப்பு உடைய மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் இடம் பெயர்கின்றனர்.
11. அண்மைக் காலங்களில் தமிழகத்திலிருந்து வளைகுடா நாடுகள், ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு மிக அதிக அளவில் இடம் பெயர்ந்துள்ளனர்.
12. தமிழ்நாட்டின் மொத்த இடப் பெயர்வாளர்களில் 65% பேர் வெளிநாடுகளுக்கும் 35% பேர் நம் நாட்டிற்குள்ளும் இடம் பெயர்ந்துள்ளனர்.
13. அதிக அளவிலான இடம்பெயர்தல் கிராமப்புறத்தில் காணப்படும் வறுமை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையினை பிரதிபலிக்கிறது.
14. எனவே ஏழ்மை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையை குறைக்கும் விதமான கிராம வளர்ச்சித் திட்டங்கள் அதிக அளவிலான இடம் பெயர்தலை குறைப்பதற்கு உதவியாக அமையும்.

19) 2015 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் கல்வித் தகுதியை ஆய்வு செய்க.

**பதில் :** **கல்வித்தகுதி:**
1. பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் - 30%
2. 12 ஆம் வகுப்பு முடித்தவர்கள் - 10%
3. தொழில் பயிற்சி பெற்றவர்கள் - 15%
4. பட்டப் படிப்பு படித்தவர்கள் - 11%
5. தொழிற்கல்வி முடித்தவர்கள் - 12%
6. முதுகலை பட்டதாரிகள் - 11%

தமிழ்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மிகவும் திறமை வாய்ந்த வேலைகளிலும், சாதாரணமாகச் செய்யக் கூடிய வேலைகளிலும், நடுத்தரமான வேலைகளிலும் ஈடுபடுகின்றனர்.

20) இடம்பெயர்தலின் வடிவம் சிக்கலான பலதரப்பட்ட நகர்வுகளை உள்ளடக்கியது - விவரி.

**பதில் :** (i) கிராமப்புறத்தில் இருந்து கிராமத்திற்கு, கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறம் நோக்கி, நகர்புறத்திலிருந்து கிராமம் நோக்கி, நகர்புறத்திலிருந்து நகரம் நோக்கிய இடப்பெயர்வுகள்.
(ii) குறுகிய நடுத்தரமான மற்றும் நீண்டதூர இடப்பெயர்தல் நகர்வுகள்.
(iii) நீண்டகால நிரந்தர இடப்பெயர்வு மற்றும் குறுகிய கால சுழற்சி முறையிலான நகர்வுகள்.
(iv) ஒவ்வொரு இடப்பெயர்வு நகர்வும் வெவ்வேறு வகையான வகுப்பு சார்ந்த குடியேற்றங்களை கொண்டிருக்கின்றன.
(v) ஒவ்வொரு இடப்பெயர்தலும் அவற்றிற்கான சொந்த காரணங்களைக் கொண்டவை.
(vi) இடப்பெயர்தலின் அளவு மற்றும் தன்மை ஆகியவை கீழ்க்கண்டவற்றைச் சார்ந்துள்ளன.
(vii) இடப்பெயர்தல் துவங்கும் இடத்தில் மக்கள் அனுபவிக்கும் அழுத்தம் மற்றும் விருப்பங்கள்
(viii) இடப்பெயர்தல் துவங்குமிடத்தில் மக்களின் நகர்வின் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள்
(ix) சேருமிடத்தில் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் மற்றும் அவை குறித்த தகவல்கள்
(x) குடியேற்ற செலவு